ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2141/88 - 2019 සැප්තැම්බර් මස 21 වැනි සෙනසුරාදා - 2019.09.21

*2141/88 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

*ச.அ.இல (பிஎஸ்/சிஎஸ்ஏ/00/01/14/8.*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்**
**அதியுத்தமராம் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களினால்**

(முத்திரை)

மைத்திரிபால சிறிசேன

(i) கௌரவ ஜனக் டி சில்வா அவர்கள்
மேன்முறையீட்டு நீதியரசர்
(ii) கௌரவ நிஸ்ஸங்க பந்துல கருணாரட்ன அவர்கள்
மேன்முறையீட்டு நீதியரசர்
(iii) கௌரவ நிஹால் சுனில் ராஜபக்ஷ அவர்கள்
இளைப்பாறிய மேல்நீதிமன்ற நீதியரசர்
(iv) கௌரவ அத்தபத்து லியனகே பந்துல குமார அத்தபத்து அவர்கள்
இளைப்பாறிய மேல்நீதிமன்ற நீதியரசர்
(v) திருமதி டபிள்யூ. எம். எம். அதிகாரி அவர்கள்
இளைப்பாறிய அமைச்சுச் செயலாளர்

ஆகியோருக்கு,

வாழ்த்துக்கள் !

1A - G 31036 — 387 (2019/09)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2019, ஏப்பிறல் 21 ஆந் திகதி கொழும்பு கொச்சிக்கடை, நீர்கொழும்பு கட்டுவாபிட்டிய ஆகிய கத்தோலிக்க தேவாலயங்களிலும், மட்டக்களப்பு சீயோன் கிறிஸ்த்தவ தேவாலயத்திலும் மற்றும் கொழும்பிலுள்ள பிரதான ஹோட்டல்கள் சிலவற்றிலும் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதல் காரணமாக பெரும் எண்ணிக்கையானோர் படுகாயங்களுக்குள்ளானதுடன், பூரணமாக அங்கவீன நிலைமைக்கும் உள்ளானதுடன், உயிர்ச் சேதங்கள் உட்பட சொத்துக்களுக்கு பெருமளவு சேதங்கள் ஏற்பட்டதினாலும்,

மேற்குறித்த தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களின் விளைவாக பல நபர்கள் உயிரிழத்தல், முழுமையாக அங்கவீன நிலைமைக்குள்ளாகுதல், காயமடைதல் மற்றும் சொத்துக்களுக்கு சேதங்கள் மற்றும் இழப்புகள் ஏற்பட்டுள்ளதனால் அதற்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ சம்பந்தப்பட்டுள்ளதாக கருதப்படும் அரச ஊழியர்களாக /உத்தியோகத்தர்களாகவிருந்த அல்லது தற்போது இருக்கும் நபர்கள் மற்றும் வேறு நபர்களுக்கெதிராக அவர்களின் செயற்பாடுகள் மற்றும் கவனயீனங்கள் தொடர்பாக பாரிய முறைப்பாடுகளும் , குற்றச்சாட்டுக்களும் செய்யப்பட்டிருப்பதனாலும்,

மேற்கூறிய தாக்குதலுடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பொறுப்புக் கூறவேண்டியவர்களுக்கு எதிராக சட்டம் உரியவாறு நிலைநாட்டப்படுவதை உறுதிப்படுத்துவதற்காகவும்,

அத்துடன், குற்றங்கள் தத்துவம் அல்லது அதிகாரத்தின் துஷ்பிரயோகம் அல்லது தவறாக பயன்படுத்தல் பொறுப்புக்களை தட்டிக் கழித்தல் ஆகியவனவாக அமையும் அத்தகைய குற்றஞ்சாட்டப்படும் செயல்கள் அத்துடன் /அல்லது செய்யத் தவறியவைகள் மீண்டும் நிகழாதிருப்பதையும் உறுதிப்படுத்துவதற்கு என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை நிச்சயிக்குமுகமாக அத்தகைய முறைப்பாடுகள், குற்றச்சாட்டுக்கள் மற்றும் தகவல்கள் தொடர்பாக புலனாய்வுகளையும், விசாரணைகளையும் நடத்துவதற்கு ஏவுவது பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் நலனுக்கு உகந்ததென்ற கருத்தினை நான் கொண்டிருப்பதனாலும்,

இதனகத்துப் பின்னர் குறிப்பிடப்படுவதும் ஏற்பாடு செய்யப்படுவதுமான விடயங்கள் தொடர்பாக புலனாய்வு செய்யவும், விசாரணை செய்யவும் மற்றும் அறிக்கையிடவும் அல்லது தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் விசாரணை ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படுதல் வேண்டுமென்று நான் கருதுவதனாலும்,

எனவே, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், உங்களது நேர்மை, விவேகம், ஆற்றல், விசுவாசம் ஆகியவற்றில் மிகுந்த நம்பிக்கையும், விசுவாசமும் வைத்து, விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் பிரிவு 2 இன் ஏற்பாடுகளுக்கமைய (393 ஆம் அத்தியாயம்) சொல்லப்பட்ட மேற்கூறிய,

(i) கௌரவ ஜனக் டி சில்வா அவர்கள்
மேன்முறையீட்டு நீதியரசர்

(ii) கௌரவ நிஸ்ஸங்க பந்துல கருணாரட்ன அவர்கள்
மேன்முறையீட்டு நீதியரசர்

(iii) கௌரவ நிஹால் சுனில் ராஜபக்ஷ அவர்கள்
இளைப்பாறிய மேல்நீதிமன்ற நீதியரசர்

(iv) கௌரவ அத்தபத்து லியனகே பந்துல குமார அத்தபத்து அவர்கள்
இளைப்பாறிய மேல்நீதிமன்ற நீதியரசர்

(v) திருமதி டபிள்யூ. எம். எம். அதிகாரி
இளைப்பாறிய அமைச்சுச் செயலாளர்

ஆகிய உங்களை மேற்கூறிய விடயங்கள் தொடர்பாக விசாரித்து பரிசீலித்து எதிர்வரும் சட்ட நடவடிக்கைகளை எடுக்கக் கூடிய வகையில் அறிக்கையிடுவதற்காக எனது ஆணையாளர்களாக இத்தால் நியமிக்கின்றேன்.

1. அரசாங்க சேவையாளர்களாக மற்றும் அதிகாரிகளாக இருந்த அல்லது தொடர்ந்து இருந்து வருகின்ற நபர்களுக்கு மற்றும் வேறு நபர்களுக்கு எதிராக, 2019, ஏப்பிறல் 21 ஆந் திகதி பாரதூரமான உயிர் மற்றும் சொத்துக்கள் ஆகிய இழப்புக்களை ஏற்படுத்தி இடம்பெற்ற குண்டுத்தாக்குதல்களினால் இடம்பெற்ற சம்பவத்திற்கு /சம்பவங்களுக்கு காரணமாக அமைந்த பல்வேறு தவறுகள், அதிகார துஷ்பிரயோகம், கவனயீனம், பொறுப்புக்களைத் தட்டிக் கழித்தல், செயலாற்று திறனின்மை, தவறவிடல் அல்லது அதனை தவறாக பயன்படுத்தியதாகக் கூறப்படும் செயல்கள் மற்றும் அத்தகைய வேறு சொல்லப்படும் செயல்கள் அத்துடன் /அல்லது செய்யத் தவறியவைகள் தொடர்பாக பொதுமக்கள் முறைப்பாடுகளையும், தகவல்களையும் சாட்சிகள் மற்றும் ஏனைய ஆவணங்களையும் கோரிப் பெறுவதற்கும் ;

2. மேலே 1 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்ட முறைப்பாடுகள், தகவல்கள், குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக துரிதமாக பக்கச்சார்பற்ற முழுமையான விசாரணைகள் மற்றும் பரிசீலனைகளை மேற்கொள்ளல் ;

3. மேலே 1 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள இந்த பயங்கரவாத செயல்களுடன் நேரடியாகவோ, மறைமுகமாகவோ தொடர்புள்ள நபர்கள் அல்லது அமைப்புக்கள் மற்றும் அவற்றின் செயற்பாடுகளை இனங்காணுதல் ;

4. நாட்டில் இவ்வாறான பயங்கரவாத மற்றும் தீவிரவாத செயற்பாடுகள் இடம்பெறுவதை முன்கூட்டியே இனங்காணுதல், அதனுடன் சம்பந்தப்பட்ட விடயங்களை தேடிப்பார்த்தல், மற்றும் சட்டத்துக்கமைய செயற்படல் தொடர்பாக அவற்றை தட்டிக்கழித்த மற்றும் அவை தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுக்காமை தொடர்பாக பொறுப்புக் கூறவேண்டிய உத்தியோகத்தர்களை, அதிகாரிகளை இனங்காணுதல் ;

5. 2019, ஏப்பிறல் மாதம் 21 ஆந் திகதி தாக்குதல் இடம்பெறுவதை தடுப்பதற்காக தனது அசமந்தம், கவனயீனம், கடமையை தட்டிக்கழித்தல், தவறவிடல், செயலாற்றுத்திறனின்மை என்பவற்றினால் உரிய நடவடிக்கை எடுக்கப்படாமைக்கு பொறுப்புக் கூறவேண்டிய அனைத்து அதிகாரம் உள்ளவர்களையும் இனங்காணுதல் ;

6. 2019, ஏப்பிறல் மாதம் 21 ஆந் திகதி பயங்கரவாத தாக்குதல் சம்பவத்தை அடுத்து நாட்டில் மக்கள் ஆர்ப்பாட்டங்கள், சீர்குலைப்புகள், சொத்துக்கள் மற்றும் நபர்களுக்கு சேதங்கள் விளைவிப்பதன் மூலம் மக்கள் கொந்தளிப்பை ஏற்படுத்த அதனுடன் தொடர்புபட்ட நபர்களையும், அமைப்புக்களையும் இனங்காணுதல் ;

7. நாட்டில் இனவாத, மதவாத முரண்பாடுகளைத் தோற்றுவிக்க காரணமான மற்றும் மக்களை ஆத்திரமூட்டும், சமூகத்தின் நலனுக்கு இடையூறுகளை ஏற்படுத்தும் சமூக ஒருமைப்பாட்டிற்கு பாதிப்புகளை ஏற்படுத்தும் இனவாத தூண்டுதல்களை ஏற்படுத்தும் செயற்பாடுகளுக்கு ஒத்தாசை வழங்கும் நபர்களினதும், அமைப்புகளினதும் செயற்பாடுகளை இனங்காணுதல் ;

8. (அ) நபர் ஒருவருக்கு மரணத்தை, முழுமையான அங்கவீனத்தை அல்லது காயத்தை ஏற்படுத்தல் ;

(ஆ) ஏதேனும் அரச நிறுவனம் அல்லது அரசுக்கு, வழிபாட்டு நிலையமொன்றிற்கு, தனியார் நிறுவனமொன்றிற்கு அல்லது அரச உடமையில் இருக்கும் சொத்துக்களுக்கு சேதங்கள் அல்லது நட்டங்களை ஏற்படுத்தி 2019, ஏப்பிறல் மாதம் 21 ஆந் திகதி நாடு முழுவதிலும் இடம்பெற்ற சம்பவங்களுக்கு காரணமான விடயங்கள் மற்றும் அவற்றின் தன்மைகளை அறிந்து கொள்தல் ;

9. எவரேனும் நபர் ஒருவர் அல்லது ஆட்களை உள்ளடக்கிய சபையொன்று அல்லது ஏதேனும் அமைப்பொன்று அல்லது அந்த அமைப்புடன் தொடர்புபட்ட நபர் ஒருவர் அல்லது நபர்கள் 1 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளை,-

(அ) செய்தார்களா அல்லது செய்ய சூழ்ச்சி செய்தார்களா ? ;

(ஆ) அந்த செயற்பாடுகளை செய்வதற்கு நிதி /பௌதிக அல்லது உடல்ரீதியாக உதவி ஒத்தாசைகளை வழங்கினார்களா அல்லது அந்த செயற்பாடுகளை செய்வதற்கு உதவிகள் அல்லது ஒத்தாசைகளை வழங்க சூழ்ச்சி செய்தார்களா ? ;

(இ) அந்த செயற்பாடுகளை செய்வதற்கு ஏதேனுமொரு வகையில் ஒத்துழைப்பு வழங்கினார்களா, ஊக்குவித்தார்களா அல்லது அந்தச் செயற்பாடுகளை செய்வதற்கு அதனுடன் சம்பந்தப்பட்டிருந்தார்களா மற்றும் அதற்காக சூழ்ச்சி செய்தார்களா மற்றும் ஊக்குவித்தார்களா ; அத்துடன்

(i) அந்த செயற்பாடுகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வளிக்க அல்லது வேறு ஏதேனும் வகையில் உதவி வழங்க தேவையெனின், அதற்கான நடவடிக்கைகளை பரிந்துரைத்தல் ;

(ii) மக்களின் பாதுகாப்பு தொடர்பாக உத்தரவாதமளிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளைப் பரிந்துரைத்தல் ;

(iii) இத்தகைய சம்பவங்கள் மீண்டும் ஏற்படுவதை தடுப்பதற்காக நடவடிக்கைகளை பரிந்துரைத்தல்.

10. மேலே பந்தி 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் வரம்பிற்குள் வருகின்ற செயல்களுள் சொல்லப்பட்ட குற்றங்களைப் புரிந்தாகக் கூறப்படும் நபர்களுக்கெதிராக குற்றவியல் வழக்குகளை தொடுக்குமுகமாக தேவையான புலனாய்வுகளையும், விசாரணைகளையும் நடத்துவதற்காக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்யும் ஆணைக்குழுவிற்கு அல்லது பொலிசிற்கு அல்லது வேறு ஏதேனும் சட்டத்தை நிலைநாட்டும் அதிகாரபீடத்திற்கு அல்லது நியதிச்சட்ட சபைக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்பதை இனங்காண்பதற்கும்;

11. மேல்சொல்லப்பட்ட குற்றங்கள் புரிந்ததாக கூறப்படும் நபர்களுக்கு எதிராக குற்றவியல் வழக்குகளை தொடுப்பதை பரிசீலிப்பதற்கு சட்டமா அதிபருக்கு உதவுமுகமாக புலனாய்வுகள் மற்றும் விசாரணைகள் தொடர்பான அத்தகைய ஆவணங்களை சட்டமா அதிபருக்கு அனுப்பி வைப்பதற்கும் ;

12. மேற்குறித்த குற்றங்கள் அல்லது குற்றச்செயல்கள் புரிந்தமைக்காக பொறுப்புதாரிகளாக இருப்பவர்களுக்கு எதிராக எடுக்கப்பட வேண்டிய ஏதேனும் நடவடிக்கைகள் இருப்பின் அந்நடவடிக்கைகள் தொடர்பான மற்றும் எதிர்காலத்தில் அத்தகைய குற்றங்கள் மற்றும் குற்றச்செயல்கள் மீண்டும் நடைபெறுவதை தடுப்பதற்குமான ஆணைக்குழுவின் பரிந்துரைகளை எனக்கு சமர்ப்பிப்பதற்கும் ;

13. இவ்வாறான பயங்கரவாத மற்றும் தீவிரவாத செயற்பாடுகள் மூலம் தேசிய பாதுகாப்புக்கும் மற்றும் இன ஒற்றுமைக்கும் ஏற்படக் கூடிய பாதிப்புக்களை தடுப்பதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை தொடர்பாக பரிந்துரைகளை முன்வைப்பதற்கும் ;

அத்துடன், மேற்சொல்லப்பட்ட ஆணைக்குழுவின் தவிசாளராக சொல்லப்பட்ட கௌரவ மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசரான ஜனக் டி சில்வா ஆகிய உங்களை நான் இத்தால் நியமிக்கின்றேன்.

அத்துடன், சொல்லப்பட்ட ஆணையாளர்களாகிய தங்களுக்குத்தென்படக் கூடியவாறான மேலே சொல்லப்பட்ட விடயங்கள் பற்றி தேவையான குற்றவியல் மற்றும் சட்ட மருத்துவ ஆய்வுகளை நடாத்துவதற்கும் அல்லது நடாத்துவிப்பதற்கும் அத்துடன் தேவையென தென்படக்கூடிய மேலே சொல்லப்பட்ட விடயங்கள் தொடர்பில் சகல பகிரங்கமன விசாரணைகளையும் அல்லது அத்துடன் அந்தரங்கமான விடயங்களையும் புலனாய்வு செய்வதற்கும் அல்லது விசாரணைகளை நடாத்துவதற்கும் இந்த பற்றாணைத் திகதியிலிருந்து மூன்று மாதத்துக்குள் முதலாவது இடைக்கால அறிக்கையை அனுப்புவதற்கும் அதன் பின்னர் இரண்டு மாதத்திற்கு ஒரு தடவை அடுத்துவரும் இடைக்கால அறிக்கைகளையும் தங்களுடைய கைவசமுள்ள திகதியிலிருந்து ஆறு மாத காலத்திற்குள் இறுதி அறிக்கையையும் தங்களுடைய விசாரணைகளின் காண்புகளைக் குறிப்பிட்டு அவற்றை அவை தொடர்பிலான உங்களுடைய சிபார்சுகளை கையெழுத்துடன் எனக்கு அனுப்பி வைக்குமாறும் தங்களை இத்தால் தேவைப்படுத்துகின்றேன்.

அத்துடன், இந்த ஆணைக்குழுக் கூட்டங்களில் கூட்ட நடப்பெண்ணை கொண்டிருப்பதற்கு உங்கள் மத்தியில் எவரேனும் மூன்று ஆணையாளர்கள் அவற்றில் பங்குபற்ற வேண்டுமென இத்தால் பணிப்பு விடுக்கின்றேன்.

அத்துடன், மேலே சொல்லப்பட்ட விடயங்கள் தொடர்பில் தங்களின் தற்றுணிபின்படி தங்களினால் நிர்ணயிக்கப்படும் மேலே சொல்லப்பட்ட விடயங்கள் தொடர்பிலான எந்த விசாரணையினதும் எத்தகைய பகுதியும் பகிரங்கமாக நடாத்தப்படலாகாது என நான் இத்தால் பணிப்பு விடுக்கின்றேன்.

அத்துடன், உதவியை அல்லது தகவல்களைப் பெறுவதற்காக தாங்கள் விண்ணப்பிக்கின்ற சகல அரச சேவையாளர்களையும், முப்படையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள், நியதிச்சட்ட சபைகளின் உத்தியோகத்தர்களையும் பிற நபர்களையும் அத்தகைய உதவியை வழங்குமாறும் புலனாய்வுக்கு அல்லது விசாரணைக்கு தேவைப்படும் அத்தகைய சகல தகவல்களையும் வழங்குமாறும் அவர்களை நான் இத்தால் கோருவதுடன் அவர்களுக்குப் பணிப்பும் விடுக்கின்றேன்;

அத்துடன், திருத்தப்பட்டவாறான, 1948 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் (அத்தியாயம் 393) இன் மேற்சொல்லப்பட்ட விசாரணை ஆணைக்குழுக்கள் விசாரணைச் சட்டத்தின் பிரிவு 14 இன் ஏற்பாடுகள் இந்த ஆணைக்குழுவிற்கு ஏற்புடைத்தாதல் வேண்டுமென இத்தால் நான் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலாஞ்சனையின் கீழ் 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் இருபதாம் நாளாகிய இன்று கொழும்பில் கையளிக்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

உதய ஆர். செனெவிரத்ன,
சனாதிபதியின் செயலாளர்.

10-217

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.